

விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.இராசேந்திரன் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இவ்விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.மாசிலாமணி, வழக்கறிஞர் ஆர்.சேதுநாதன், சீதாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் பா.சேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனி ராஜ், ந.கபிலன், வழக்கறிஞர் கே.அசோகன் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், நண்பர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

### இஸ்லாமியர்களின் முன்னேற்றத்திற்கும் - பாதுகாப்பிற்கும்

# எப்போதும் உறுதுணையாக இருக்கும் இயக்கம் தி.மு.க.!

## சட்டமன்றத்தில் சிவ.வீ.மெய்யநாதன் பெருமிதம்!

சென்னை, ஆக. 31-

சட்டமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தின் போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மெய்யநாதன் பேசினார் அவர் பேசியதாவது-

இந்தியாவிலேயே சமூக நீதியை நிலை நாட்டிய மண் தமிழ்நாடு மண், நிலைநாட்டிய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்,

இஸ்லாமிய மக்களுக்கு 3.5% இட ஒதுக்கீட்டை இந்தியாவிலேயே முதன் முறையாக வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

இஸ்லாமிய மக்களின் மீது தனி அக்கறை கொண்டு தமிழ்நாட்டில் உள்ள நூறு ஆண்டுகள் பழமையான ஐந்து பள்ளிவாசல்களை அதன் பழமை மாறாமல் புதுப்பிக்க 50 கோடி நிதி ஒதுக்கிய முதல்வர் கடந்த காலத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்திய தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள்.

கபிஸ்தலங்களை பற்றி இங்கு குறிப்பிட்டார்கள், தமிழ்நாட்டில் எங்கெல்லாம் இடம் இருக்கிறதோ அங்கெல்லாம் கபிஸ்தலங்கள் கட்ட உத்தரவு பிறப்பித்த அரசு தி.மு.க. அரசு.

அதே போல் ஹஜ் யாத்திரை செல்லுபவர்கள் தங்கி செல்வதற்கு



போதிய கட்டிட வசதி இல்லை என்றும், தங்க வசதி வேண்டுமென்று இஸ்லாமியர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ரூபாய் 40 கோடியில் கட்டிடம் கட்டித் தந்தவர் தளபதி முக ஸ்டாலின் அவர்கள்.

அதேபோல் தேவாலயங்கள் பள்ளிவாசல்கள் கட்ட 30 நாளில் அனுமதி தர வேண்டும் என்ற அரசாணை பிறப்பித்ததும், ஒருவேளை முப்பது நாளில் அனுமதி தரவில்லை என்றால் 31 வது நாள் அனுமதி தந்ததாக கருதி கட்டிடப் பணியை துவங்கலாம் என்ற அரசாணை பிறப்பித்ததும் தி.மு.க. ஆட்சி தான், இது போன்று இஸ்லாமியர்கள் முன்னேற்றத்திற்காக வும், பல்வேறு வகைகளிலும் இஸ்லாமிய இயக்கத்தை பாதுகாத்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை பார்த்து இஸ்லாமியர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று கூறுவது நியாயம் தானா என்று கேட்க விரும்புகிறேன்.

இட ஒதுக்கீட்டை பொருத்தவரை 1989 ஆம் ஆண்டே 108 சாதிகளுக்கு 20 % இட ஒதுக்கீட்டை வழங்கி பெருமை படுத்தியவர் கலைஞர் அவர்கள்.

அதனைத் தொடர்ந்து வன்னிய சமுதாயத்திற்கு10.5 சதவீதம் இட ஒதுக்கீடு அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்தாலும் அதனைத் தி.மு.க. ஆட்சியிலும் தொடர்ந்தது. இது தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்ற த்தில் நடைபெற்ற போது, 10.5% இட ஒதுக்கீட்டை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்ற உத்தரவிட்டது.

அவரை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து தி.மு.க. அரசு போராடியது, அப்பொழுது உச்சநீதிமன்றத்தில் எந்த தரவுகளின் அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது, என்று கூறி ரத்து செய்தது, மேலும் தற்காலிக தரவுகளின் அடிப்படையில் தான் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் அப்போதைய முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய பிரதமருக்கு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கடிதம் எழுதினார், அதனைத் தொடர்ந்து 26.10.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்த ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒன்றிய அரசு அனுப்பப்பட்டது, அதன் அடிப்படையில் ஒன்றிய அமைச்சரவை கூடி, 2029ல் மக்கள் தொகை கணக்கிடப்புடன் இணைந்து சாதி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்தது, அதன் அடிப்படையில் தான் தற்பொழுது புதிய அரசு பொறுப்பேற்றதும், ஆளுநர் அவர்கள் நிதிநிலை அறிக்கை படிக்கும்போது ஒன்றிய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தும் போது தமிழ்நாட்டிலும் நடைபெறும் என்று அறிவித்தார்கள்.

இங்கு இந்த சட்டமன்றத்தில் ஒன்றை மட்டும் பதிய வைக்க விரும்புகிறேன். எந்த சூழ்நிலையிலும் வன்னிய சமூகத்திற்கு 10.5. % இட ஒதுக்கீடு வெற்றி பெற தி.மு.க. எப்பொழுதும் உறுதுணையாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவர் அவர் பேசினார்.

## மலேசிய தளபதி பேரவை சார்பில் கருத்தரங்கம்!

கோலாலம்பூர், ஆக. 31 –

மலேசிய தளபதி பேரவை சார்பில் கருத்தரங்கம். காணொளி வாயிலாக நடைபெற்றது. சோபா மாடல் ஆட்சியின் அவலங்களும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளும். என்கின்ற தலைப்பில். மலேசியா தளபதி பேரவை. செயலாளர். ஹச்எம்.ஜெய்னுதீன். தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில். கவிச்சுடர் கவிதை பித்தன், பர்கூர் மதியழகன். அரவிந் ரமேஷ் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் மணிவண்ணன், வேல்முருகன், பரமேஸ்வரி, ஜெய் பூநிஷா, சமி. கார்த்தி, திருவாரூர் வேலாயுதம், நீடூர், அயூப் அன்சாரி, சுந்தர், சுரேஷ், சவுதி ஆசிப் அலி சேட், புரூணை உசேன், ரஹ்மத் துல்லா, சௌந்தர பாண்டியன், நிஷா, தர்மா, முகமது இஸ்மாயில், அபுதாஹீர், நாகேந்திரன், வள்ளி, சபியா பேகம், மூர்த்தி, சுந்தரம், அபுதாபி, மன்சூர், ரஞ்சித், குமார், துபாய், சேகர், உசேன் முகமது, ரவிக்குமார், ஹக்கீம் அலி. ஹனிஃபா, நூருதீன், முல்லை டிவி. ஹபீப் ரஹ்மான், வரகனேரி அசாருதீன், ராஜ் முகம்மது, சதாம் உசேன், பாரூக், தில்லை நகர் தினேஷ், கா.புருசோத்தமன், நாகேந்திரன், நிஜாம், ராஜகிரி, சாகுல் ஹமீது, கிரேசி, பூர்ணிமா, கனிமொழி கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில். ஜே. சிவானந்தம் நன்றி கூறினார்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!




### அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம்

# தேரூர் பேரூர் தி.மு.க.நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!




கன்னியாகுமரி, ஆக. 31 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம், தேரூர் பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 28.08.2026, வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் தேரூர் பேரூர் செயலாளர் G.முத்து தலைமையில், அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம். மதியழகன் முன்னிலையில் தேரூர், கவிமணி நூல் நிலை யத்தில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதிகள் என்.ஆறுமுகம், வே.முருகன், பேரூர் துணைச் செயலாளர் சசி, பொருளாளர் M.ஞானசேகர், ஒன்றிய பிரதிநிதிகள் பெருமாள், பாபு, அருள்கண்ணன், மு.தம்புரான், M.பழனிவேல், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் A.கவிதன், J.ஆன்றோ போஸ்கோ, கழக நிர்வாகிகள் முரளி, ஜெயசிங், சுரேஷ், சிவா, கற்பகபெருமாள், மு.புலமாடன், இசக்கிமுத்து உட்பட ஒன்றிய மற்றும் பேரூர் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

தீர்மானம்: 1 தேரூர் பேரூராட்சிக்குட்பட்ட புதுக்கிராமம் காலனி, மகாராஜபுரம், சேதுலெட்சுமி மகாராணிபுரம், கஸ்தூரிபாய் கிராமம், சுப்பிரமணியபுரம், கண்ணன்பதி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களது வீட்டிற்கான பட்டா அவர்களது பெயரில் அரசு வழங்கிட கேட்டு தேரூர் பேரூர் தி.மு.க சார்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம்: 2 தேரூர் பேரூராட்சி கண்ணன்பதி பகுதியில் அமைந்துள்ள சமுதாய நலக்கூடம் மிகவும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே அதனை உடனடியாக சரிசெய்து தரும்படி மாவட்ட நிர்வாகத்திடம் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம்: 3 வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 4 கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் தேரூர் பேரூர் தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

### திண்டிவனம் நகரம் - 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர்

# கே.இராசேந்திரன் இல்லத் திருமண வரவேற்பு: முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் வாழ்த்தினார்!

## டாக்டர் இரா.மாசிலாமணி - வழக்கறிஞர் ஆர்.சேதுநாதன் - சீதாபதி சொக்கலிங்கம் பங்கேற்பு!

திண்டிவனம், ஆக. 31 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.இராசேந்திரன் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இவ்விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.மாசிலாமணி, வழக்கறிஞர் ஆர். சேதுநாதன், சீதாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் பா.சேகர்,

தலைமையின் செயற்குழு உறுப்பினர் சீனி ராஜ், ந.கபிலன், வழக்கறிஞர் கே.அசோகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ர.கே.பி.ரமேஷ், எம்.டி.பாபு, நகர கழகச் செயலாளர் எம்.கண்ணன், நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகர கழக அவைத் தலைவர் ஆர்.ரவிச்சந்திரன், மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன்,

நகரப் பொருளாளர் சின்னா கே.ராஜேந்திரன், நகர மன்ற உறுப்பினர்கள் லதா சாரங்கபாணி, அரும்பு குணசேகரன், கே.சரவணன், பரணிதரன், விஜயராகவன், வி.சுந்த ரமூர்த்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.எல்.பி.கோபிநாத், மாவட்டத் தொண்டர் அணி தலைவர் பிர்கா எஸ்.செல்வம், எல்.ஐ.சி.ரஜேஷ், டி.ஏகாம்பரம், அன்னை எஸ்.சந்தானம், எஸ்.எம்.எஸ்.முரளிதர், சுகுமார், ஒலக்கூர் ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.ராஜாராம், மரக்காணம் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.பழனி, மையம் ஒன்றிய செயலாளர் மணிமாறன், ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை, மாவட்ட இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அணி துணை அமைப்பாளர் ஆசிரியர் எம்.குப்புசாமி, கோவிந்தாபுரம் சீத்தாராமன், ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி காளி,

வழக்கறிஞர் செந்தில்குமார், இலியாஸ், மேஸ்திரி என்.ராஜேந்திரன், எம்.தஸ்தகீர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், நண்பர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே. இராசேந்திரன் அனைவரையும் வரவேற்றார்.



விளாத்திகுளம் ஸ்ரீ வண்டி மலைச்சியம்மன் தேர்திருக்கோவில் கும்பாபிஷேக விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்கண்டேயன் கலந்து கொண்டார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, மாவட்டப் பிரதிநிதிகள் கிருஷ்ணகுமார், இராமலிங்கம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.வே. செழியன்

### ஆகஸ்ட் 31 (2022)



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

1975ஆம் ஆண்டு தனது பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றம் தொடங்கி, பின்னர் பெரியார் எழுச்சி மன்ற காப்பாளராகவும், பின்னர் வட்டக் கழகத்தில் பகுதி பிரதிநிதியாகவும் திருவல்லிக்கேணி பகுதி துணைச் செயலாளராகவும், பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து, அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"திருவல்லிக்கேணியில் கழகம் வளர்த்த உண்மைத் தொண்டர்"என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.